## IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 338-2024** | **நாள் – 17.04.2026** | **சாட்சி – ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | தந்தை பெயர் | முருகேசன் |
| ஊர் | புளியஞ்சேரி | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | ஆட்டோ ஓட்டுநர் | வயது | 30/2026 |

**முதல் விசாரணை:**

மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல்நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்து போன மருதமுத்து எனக்கு உறவினரா என்றால் பக்கத்து ஊர் என்பதால் அவர் எனக்கு பழக்கம். மருதமுத்துவை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் பத்து வருடங்களாக தெரியும். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் ஆட்டோ ஓட்டி வருகிறேன். விபத்து நடந்த தேதி தெரியுமா என்றால் 26.06.2024. 26.06.2024 அன்று இரவு 09.00 அல்லது 09.05 மணிக்கு விபத்து நடந்தது. விபத்து எவ்வாறு நடந்தது என்றால் மருதமுத்து இருசக்கரவாகனத்தில் நெடுஞ்சலையில் தெற்கில் இருந்து வரும்போது வடக்கிலிருந்து வந்த ஈச்சர் வேன் மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது நெடுஞ்சாலையில் மற்றொரு வழியில் பராமரிப்பு வேலை நடந்து கொண்டிருந்ததால் ஒரு வழியில் மட்டுமே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த ஒரு வழியானது இறக்கமாக இருக்கும் என்றால் சரிதான். அந்த இறக்கத்தில் வலது புறமாக

திரும்பினால் கொட்டையூர் வழி  சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஈச்சர் வேன் இறங்கி வந்தது அதே போல் மருதமுத்துவும் சர்வீஸ் சாலையில் செல்வதற்காக இறங்கி வந்தார். இரண்டு வாகனங்களும் ஒன்றுக்கொன்று  நேரே மோதிக்கொண்டன என்றால் சரிதான். மருதமுத்து எதிரே ஈச்சர் வேண் வருவதை பார்த்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றாலும் அதே போல் ஈச்சல் வேன் ஓட்டுநர் மருதமுத்துவை பார்த்திருந்தாள் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான்.இரண்டு வாகனங்களின் ஓட்டுநர் ஒருவருக்கொருவர் பார்த்திருந்தால் விபத்து நடக்காமல் தவிர்திருக்கலாம் என்றால்  ஈச்சர் வேன் குறைவான வேகத்தில் வந்திருந்தால் மருதமுத்து சர்வீஸ் சாலைக்கு மாறி சென்றிருப்பார். மருதமுத்து ஈச்சர் வேன் வருவதை பார்த்திருந்தால் விபத்தை தவிர்திருக்கலாம் என்றால் ஈச்சர் வேன் வருவதை மருதமுத்து பார்த்திருந்தாலும் அவர் மாறி விபத்தை தவிர்திருக்க முடியாது.  சர்வீஸ் சாலை அகலம் குறைவானது என்றால் அகலமானது ஆகும். சர்வீஸ் சாலையின் அகலம் எவ்வளவு என்றால் 30 அடி இருக்கும்.  சர்வீஸ் சாலையின் அகலம்  highway சாலையின் அகலத்தை விட குறைவாக இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக highway சாலையில் வாகனங்கள் வரும்போது சர்வீஸ் சாலையை கண்டறிவது சிரமம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்றால் எனது வீட்டில் ஆட்டோவை நிறுத்தி விட்டு போனில் பேசிக் கொண்டிருந்தேன். விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று தெரிந்து  கொண்டேனா என்றால் இல்லை.  அதற்கு பிறகு விபத்து சம்பந்தமாக எந்த நிகழ்வுகளிலும் ஈடுபடவில்லை என்றால் 2 நாட்கள் கழித்து ஆய்வாளர் விபத்து சம்பந்தமாக என்னிடம் வாக்குமூலம் பெற்றார்.  முதல் தகவல் அறிக்கையில் நான் விபத்தை பார்த்ததாகவோ  நான் சாட்சி என்றோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.  மருதமுத்துக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதும் அவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்பதும்

எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு உண்மையிலேயே ஆய்வாளர் என்னை விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து என்னை விசாரித்திருந்தால் முதல் தகவல் அறிக்கையில் என் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் ஈச்சர் வேன் மோதியதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் அடையாளம் தெரியாத வாகனம் மோதியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். ஈச்சர் வேன் மோதியது என்று ஏன் நான் காவல் நிலையத்தில் கூறவில்லை என்றால் ஆய்வாளர் என்னை விசாரித்த போது தான் கூறினேன். விபத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் மருதமுத்துவிற்கு நான் வேண்டபட்டவர் என்பதால் மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.04.17 06:01:29 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*